(☎ 04175 - 236654 / 235295

# SHANMUGA INDUSTRIES
# ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

13.10.2022

## உலகத் தர நிர்ணய தினம்
## (BUREAU OF INDIAN STANDARDS WORLD STANDARD DAY)

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் உலகத் தர நிர்ணய தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிக்குக் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து,** பொருளாளர் **எம்.சீனுவாசன்,** ஆகியோர் தலைமை வகித்தனர். கல்லூரியின் முதல்வர் மற்றும் இன்னவேட்டிவ் இன்ஸ்டிடியூஷன் செல் தலைவர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** துவக்கவுரையாற்றினார். கல்விப்புல முதன்மையர் பேராசிரியர் **அழ.உடையப்பன்,** வாழ்த்துரை வழங்கினார். முதுநிலை கணினி பயன்பாட்டியல் துறை மாணவர் **எம்.ராஜேஷ்** வரவேற்புரையாற்றினார். முதுநிலை நுண்ணுயிரியல் துறை மாணவர் **டி.தமிழ்மணி** தொகுத்து வழங்கினார்.

வேதியியல் துறைத்தலைவரும் இந்தியதேசிய தரமதிப்பீட்டு மன்ற ஒருங்கிணைப்பாளருமான முனைவர் **அ.தினேஷ் கார்த்திக்** உலகத் தர நிர்ணய தினத்தை பற்றிய விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்தினார். "இந்திய தர சான்றிதழ்கள் பெறுவது எப்படி, தரமான பொருட்களை கண்டறிவது எப்படி, இந்திய தர செயலியை கைப்பேசியில் (Mobile) தரவிறக்கம் செய்து அவற்றின் செயல்பாடுகள் குறித்தும் மற்றும் தங்க நகைகளின் குறியீடுகளைப் பற்றியும் விரிவாக செயல் விளக்கத்துடன் விளக்கினார். மேலும், பங்கேற்பாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

இந்நிகழ்ச்சியில் நிறைவாக முதுகலை வணிகவியல் துறை மாணவர் **எஸ்.ஸ்ரீஅருண் பாலாஜி** நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை வேதியியல் துறைத்தலைவரும், இன்னவேட்டிவ் இன்ஸ்டிடியூஷன் செல் மாணவர்களும் மற்றும் இந்திய தரமதிப்பீட்டு மன்ற மாணவர்களும் செய்திருந்தார். அனைத்து துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், 150 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

**செயலர் மற்றும் தாளாளர்**


இந்திய தர நிர்ணய அமைவனம்
BUREAU OF INDIAN STANDARDS
CHENNAI BRANCH OFFICE - II
In co-ordination with
சண்முகா தொழிற்சாலை கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவண்ணாமலை
SHANMUGA INDUSTRIES ARTS AND SCIENCE COLLEGE, TIRUVANAMALAI
STANDARDS CLUB
FOR STUDENTS
SHANMUGA INDUSTRIES ARTS AND SCIENCE COLLEGE
THIRUVANNAMALAI